**திருநெல்வேலி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை**

**(மே 27-ம் தேதி முதல் மே 31-ம் தேதி வரை)**
**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (22.5.15- 25.5.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 34- 35 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 27- 28 |
| வானம் (ஆக்டா) | 4- 6 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 78- 91 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 83- 91 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 15- 35 |
| காற்றின் திசை | 180- 230 |

**31.5.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| **வானிலை காரணிகள்** | **வானிலை முன்னறிவிப்பு** | | | | |
|---|---|---|---|---|---|
| | **நாள் 1**<br>**27.5.15** | **நாள் 2**<br>**28.5.15** | **நாள் 3**<br>**29.5.15** | **நாள் 4**<br>**30.5.15** | **நாள் 5**<br>**31.5.15** |
| மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 2 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 39 | 38 | 38 | 37 | 37 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 27 | 27 | 27 | 26 | 26 |
| வானம் (ஆக்டா) | 3 | 3 | 3 | 3 | 3 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 45- 67 | 50- 70 | 50- 70 | 58- 75 | 58- 75 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 2/ மேற்கு | 2/ மேற்கு | 2/ மேற்கு | 2/ தென்மேற்கு | 2/ தென்மேற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகமான வெப்பநிலை, இலேசான மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| **பயிர்/ சாகுபடி சூழல்** | **பருவம்/ சாகுபடி செயல்கள்** | **வேளாண் வானிலை ஆலோசனை** |
|---|---|---|
| நெல் | நாற்று பருவம் | நெல் நாற்றங்காலில் நாற்றுகளின் வளர்ச்சி குறைவாக இருந்தால் 0.5 சத யூரியா கரைசல்+ 0.5 சத சிங்க் சல்பேட் கரைசலை விதைத்த 8- 10ம் நாளில் தெளிக்கவும். நல்ல வாளிப்பான நாற்றுகளை பெறுவதற்கு டி.ஏ.பி. 2 கிலோ/ சென்ட் மற்றும் சூடோமோனாஸ் 240 கிராம்/ சென்ட் என்ற அளவில் நாற்றங்காலுக்கு இட்டு, 0.5 சத யூரியா கரைசலை மண்ணில் விதைத்த 9-ம் நாளில் ஊற்றவும். |

| | | |
|---|---|---|
| | | நெற்பயிரின் ஊட்டச்சத்து தேவையை பூர்த்தி செய்ய நடவு வயலுக்கு ஜிப்சம் 500 கிலோ/ எக்டர் என்ற அளவில் கடைசி உழவின்போது இடவும். தொழுஉரம் 12.5 டன்/ எக்டர் அல்லது பசுந்தழை உரம் 6.25 டன்/ எக்டர் அல்லது பசுந்தாள் உரம் இடவும். 4000 கிராம்/ எக்டர் அசோபாஸ் மற்றும் சூடோமோனாஸ் 2.5 கிலோ/ எக்டர் ஆகியவற்றை 25 கிலோ தொழுஉரம் + 25 கிலோ மண்ணுடன் கலந்து நடவு வயலில் இடவும்.<br><br>நெற்பயிருக்கு வறட்சியை தாங்கி வளரும் திறனை அளிக்கும்பொருட்டு பி.பி.எப்.எம். (PPFM) என்ற பாக்டீரியாவை 2 கிலோ/ எக்டர் என்ற அளவில் மண்ணில் இடவும்.<br><br>நெல் வயலில் ஊட்டச்சத்து பயன்பாட்டு திறனை மேம்படுத்த பரிந்துரைக்கப்படும் தழைச்சத்தில் 25 சதம், முழு மணிச்சத்து மற்றும் 25 சத சாம்பல் சத்து அதாவது டி.ஏ.பி. 108.5 கிலோ/ எக்டர், யூரியா 39 கிலோ/ எக்டர் மற்றும் பொட்டாஷ் 20.9 கிலோ/ எக்டர் என்ற அளவில் அடியுரமாக இடவும். சிங்க சல்பேட் 25 கிலோ/ எக்டர் உரத்தை 50 கிலோ உலர்ந்த மணலுடன் கலந்து நாற்றுகளை நடுவதற்கு முன்பு இடவும்.<br><br>திருந்திய நெல் சாகுபடியில் மகசூலை மேம்படுத்த 14 நாட்கள் வயதான நாற்றுக்களை குத்துக்கு ஒன்று வீதம் நாற்றுக்களின் வேர்ப்பகுதியை அசோபாஸ் (2000 கிராம்/ எக்டர்) நுண்ணுயிர்க்கரைசலில் நனைத்து 25 x 25 செ.மீ. இடைவெளியில் 3 செ.மீ. ஆழத்தில் நாற்றுக்களை பறித்த 30 நிமிடங்களுக்குள் நடவும். முதல் 10 நாட்களுக்கு மண்ணை ஈரப்படுத்தும் அளவு மட்டுமே நீர்ப்பாச்சவும். |
| தென்னை | காய்க்கும் பருவம் | காய்க்கும் பருவத்திலுள்ள தென்னையில் காண்டாமிருக வண்டின் தாக்குதல் காணப்படுகிறது. இதனை கட்டுப்படுத்த ஒரு கிலோ ஆமணக்கு பிண்ணாக்கினை 5 லிட்டர் தண்ணீரில் மண்பானைகளில் ஊறவைத்து தோப்புகளில் ஆங்காங்கே வைத்து வண்டுகளைக் கவர்ந்து அழிக்கவும்.<br><br>வேப்பங்கொட்டைத்தூள் அல்லது வேப்பம்பருப்புத்தூள் 150 கிராமுடன் இரண்டு மடங்கு மணலை கலந்து மடல் பகுதிகளில் |

| | | |
|---|---|---|
| | | உள்ளிருந்து மூன்றாவது மட்டையின் அடிப்பகுதியில் பண்ணாடைகளுக்கு இடையில் வைப்பதன் மூலம் வண்டுகளால் ஏற்படும் சேதத்தைத் தவிர்க்கலாம் .<br><br>ரைனோலூர் (Rhinolure) இனக்கவர்ச்சிப்பொறியை இரண்டு எக்டருக்கு ஒன்று வீதம் வைத்து வண்டுகளைக் கவர்ந்து அழிக்கவும். |
| மானாவாரி நிலங்கள் | களைமேலாண்மை | கடந்த வாரங்களில் பெறப்பட்ட மழையை ஒட்டி மானாவாரி நிலங்களில் முளைத்துள்ள களைகளை அழிக்க வயலை மண்ணின் ஈரப்பதம் சரியான பக்குவத்தில் இருக்கும்போது உழவு செய்யவும். இவ்வாறு உழவு செய்வது மண்ணில் களை விதைகளின் பெருக்கத்தை குறைக்க உதவும். |
| மானாவாரி நிலங்கள் | மண்வள மேலாண்மை | மானாவாரி நிலங்களில் கடந்த வாரங்களில் பெறப்பட்ட மழையை ஒட்டி, ஓரளவு நீர்ப்பாசன வசதியுள்ள பகுதிகளில் பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப்பூண்டு அல்லது சணப்பை பயிரை எக்டருக்கு 20 கிலோ என்ற விதை அளவை பயன்படுத்தி விதைக்கவும். இப்பசுந்தாள் உரப்பயிர்களை 50 சத பூக்கும் பருவத்தில் (விதைத்த 45- 50ம் நாளில்) ரோட்டோவேட்டர் கொண்டு மடக்கி உழவு செய்தல் வேண்டும். இவ்வாறு செய்வது மண்வளத்தை மேம்படுத்த உதவும். |

குறுஞ்செய்தி- மானாவாரி நிலங்களில் களைகளை அழித்து களை விதைகளின் பெருக்கத்தை குறைக்கும் வகையில் வயலை உழவு செய்யவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி